RT636299680IN IVR:8284636299680
RL SATANKULAM S.O <628704>
Counter No:1,30/01/2018,11:44
To:DIST EDUCATIO,PUB INFORM OFFIC
PIN:628003, New Colony S.O (Tuticorin)
From:S PETER RAJ,9 RICE SHOP STRE
Wt:38gms
Amt:30.00(Cash)

Registered Post with A/D

30.01.2018

அனுப்புநர்

**S. Peter Raj** M.A(His), M.A(Eco), M.A(Eng), M.A(Psy), M.A(Soc), M.A(Pol), M.A(Pub.Admin), M.A(GT), M.A(Ind.Cul), M.Ed, B.G.L.,
**AVE MARIA - 9, Rice Shop Street, SATANKULAM– 628 704, Thoothukudi Dist., Tamilnadu**
(Email: **sssavemaria@gmail.com**) Mobile: **94425 29442**

பெறுநர்

10 रु. COURT FEE Rs.10 INDIA दस रुपये TEN RUPEES

பொது தகவல் அலுவலர்
மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகம்
தூத்துக்குடி – 628 003

அய்யா/அம்மா,

**பொருள்:-** தகவலறியும் உரிமை சட்டத்தின்கீழ் தகவல் வேண்டுதல் சார்பாக
**பார்வை:-** 1. தூத்துக்குடி மாவட்ட கல்வி அலுவலரின் கடிதம் ஓ.மு.எண்.7383/அ4/2017 நாள் 29.12.2017
2. பிஷப் இவான் அம்புரோஸின் கடிதம் Ref.No.2017/252 dated 28.12.2017

பார்வை 1ல் காண் கடிதம் வாயிலாக Ref.No. 2017/ 252 dated 28.12.2017 என்ற பிஷப் இவான் அம்புரோஸின் கடிதத்தை எனக்கு அனுப்பியுள்ளீர்கள். அதனடிப்படையில் கீழ்கண்ட தகவல்களை வேண்டுகிறேன்.

**1)** 13.07.2016 அன்று (வழக்கு எண்கள்: SA13615/D/2015 & SA2078/D/2015 Order dated 13.07.2016) மாண்புமிகு தகவல் ஆணையர் முன்னிலையில் B2/1-6 dated 18.05.2005 என்ற கடிதத்தை அட்டெஸ்ட் செய்து அதை பிஷப் இவான் அம்புரோஸ் என்பாரின் மேலாளர் பதவிக்கான நியமன ஆணை என்று எனக்கு கொடுத்தீர்கள். அதில் மேலாளர், ஆர்.சி பள்ளிகள், தூத்துக்குடி டயோசிஸ் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் கார்பரேட் மேனேஜர் என்ற வார்த்தையே இல்லை. ஆனால் பார்வை 2ல் காண் கடிதத்தில் 19.05.2005 முதல் மேற்படி பிஷப் இவான் அம்புரோஸ் என்பார் கார்பரேட் மேனேஜர் பதவியில் செயல்படுகிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னார் 19.05.2005 முதலே கார்பரேட் மேனேஜர் என்ற பதவியில் செயல்படுகிறார் என்பதற்கு தங்கள் அலுவலகத்தில் உள்ள கோப்புகளிலிருந்து ஆதாரங்களை தகவலாக தருக.

**2)** Ref.No.2017/252 dated 28.12.2017 என்ற பிஷப் இவான் அம்புரோஸின் அதே கடிதத்தில் வரிசை எண் 1ல் **Bishop Yvon Ambroise has been functioning as the Corporate Manager/Bishop from 19.05.2005, which was rectified by the society resolution on 28.09.2005** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த விவரங்கள் அல்லது ஆவணங்கள் **rectify** செய்யப்பட்டுள்ளது என்பதையும் என்னென்ன **Rectification**-கள் செய்யப்பட்டுள்ளன என்ற விவரத்தினையும் தகவலாக தருக.

Scanned by CamScanner

3) மேற்கண்ட **Rectification**-க்கு கல்வி முகமை 28.09.2005ல் தீர்மானம் நிறைவேற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தீர்மானம் பிஷப் இவான் அம்புரோஸின் பள்ளி நிர்வாகம் மற்றும் கார்பரேட் மேனேஜர் பதவி சம்மந்தப்பட்டதாக இருப்பதால் அதன் நகலினை தகவலாக அனுப்பி உதவிடுக.

4) இரண்டாவது இனத்தில் **An information has been given to the authorities by the letter dated 18.05.2005. No application is prescribed under law** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நபர் பல பள்ளிகளுக்கு புதிதாக மேனேஜர் ஆகும்போது அன்னார் மேனேஜர் ஆன தகவலை மட்டும் மாவட்ட கல்வி அலுவலருக்கோ அல்லது பிற கல்வி இலாகா அதிகாரிகளுக்கோ கொடுத்தால் போதுமானது என்றும் நியமன ஆணை தேவை இல்லை என்றும் எந்த சட்டம் கூறுகிறது என்பதை தகவலாக தருக. அதற்கான அரசு விதி விவரங்களை தகவலாக தருக. மேற்படி18.05.2005 நாளிட்ட கடிதம் தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதற்கான ஆதாரத்தினை தகவலாக தருக.

5) மேற்படி பார்வை 2ல் காண் கடிதத்தில் மூன்றாவது இனத்தில் **The consecration of the Bishop on 18.05.2005 as Bishop of Tuticoin of Tuticorin Diocese authorizes him to take over the diocese and its administration including educational institutions.** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி டயோசிஸ் பிஷப் திருநிலைப்படுத்தப்படும்போது அவர் The Tuticorin Diocesan Association என்ற கல்வி முகமை (NGO) நடத்தும் பள்ளிகளுக்கு மேலாளர்ாக ஆகிவிடுவார் என்பதற்கு சட்டத்தில் இடம் இருந்தால் அந்த சட்டத்தின் பெயர் மற்றும் பிரிவு விவரங்களை தகவலாக தருக. தமிழ்நாடு தனியார் பள்ளி ஒழுங்குமுறை சட்டத்தில் இதற்கான விதிகள் இருந்தால் அதன் விவரங்களை தகவலாக தருக.

6) பாதிரியார் டொமினிக் அருள் வளனுக்கு கண்காணிப்பாளராக நியமன ஆணை கொடுத்தது Manager of R.C.Schools, Tuticorin Diocese ஆகும். ஆனால் தற்போது மேற்படி பிஷப் இவான் அம்புரோஸ் 19.05.2005லிருந்து கார்பரேட் மேனேஜராக செயல்படுகிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பள்ளிகளை நடத்துவது The Tuticorin Diocesan Association என்ற கல்வி முகமை (NGO) என்பது Ref.No.2017/252 dated 28.12.2017 என்ற கடிதத்தின் லெட்டர் ஹெட்டிலிருந்து தெரிய வருகிறது. எனவே கார்பரேட் மேனேஜரோ அல்லது கல்வி முகமையோ பாதிரியார் டொமினிக் என்பாருக்கு நியமன ஆணை கொடுக்கவில்லை. அப்படி இருக்கும்போது தாங்கள் 13.07.2016ல் மாண்புமிகு தமிழ்நாடு ஆணையத்தின் முன்பு அட்டெஸ்ட் செய்து கொடுத்த கண்காணிப்பாளரின் நியமன ஆணையான 2013/85 நாள் 20.05.2013 என்ற ஆணை சட்டப்படி செல்லத்தக்கதா என்ற விவரத்தினையும் எந்த சட்டப்படி அல்லது விதிகளின்படி இதுநாள் வரைக்கும் பாதிரியார் டொமினிக் கையெழுத்திட்ட ஆவணங்களை ஏற்றுக் கொண்டு அரசின் சலுகைகளையும் மான்யங்களையும் வழங்கினீர்கள் எனற விவரத்தினையும் தகவலாக தருக.

7) மேற்படி தவறையும் முரண்பாடையும் சம்மந்தப்பட்ட கல்வி முகமைக்கு தெரியப்படுத்தினீர்களா என்ற விவரத்தினை தகவலாக தருக.

Scanned by CamScanner

8) மேற்படி Ref.No.2017/252 dated 28.12.2017 என்ற கடிதத்தில் பிஷப் இவான் அம்புரோஸ் என்பார் 5வது இனத்தில் **No appointment order was given to Bishop Yvon Ambroise by the Secretary of Tuticorin Diocesan Association in B2/1-6 dated 18.05.2005, but only an information was given to authorities.** என்று தெரிவித்துள்ளார். மேற்படி **Information** எந்தெந்த அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரத்தினை தகவலாக தருக.

9) பிஷப் இவான் அம்புரோஸ் மேலாளராகவும் கார்பரேட் மேனேஜராகவும் செயல்பட நியமன ஆணை தேவை இல்லை என்பதற்கு அரசு விதிகளில் இடமுண்டெனில் அந்த விதிகளின் விவரங்களை தகவலாக தருக. பள்ளிகளின் கண்காணிப்பாளர்களுக்கும் தாளாளர்களுக்கும் . நியமன ஆணைகள் வழங்கப்படவேண்டும் என்பதையும் மேலாளருக்கு அல்லது கார்பரேட் மேனேஜருக்கு நியமன ஆணை தேவை இல்லை என்பதையும் உறுதிப்படுத்தும் அரசு விதிகளின் விவரங்களையும் சட்ட விதிகளையும் தகவலாக தருக.

10) தங்கள் அலுவலகம் K.Dis.No.6344/A1/2013 dated 27.11.2013 என்ற செயல்முறைகள் மூலம் பாதிரியார் எட்வர்ட் என்பார் சாத்தான்குளம் தூய இருதய மேல்நிலைப்பள்ளி மற்றும் புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றிகு தாளாளராக நியமிக்கப்பட்டதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. Manager of R.C.Schools என்ற பதவியில்தான் பிஷப் இவான் அம்புரோஸ் நியமன ஆணை வழங்கியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தேதியிடப்படாத தாளாளர் கடிதத்தில் தூத்துக்குடி மறைமாவட்ட ஆர்.சி கத்தோலிக்க பள்ளிகளின் மேலாளர் Ref.No.CC/10-11/5ன்படி தன்னை மேற்படி பள்ளிகளுக்கு தாளாளராக நியமித்துள்ளதாக பாதிரியார் எட்வர்ட் குறிப்பிட்டுள்ளார். கார்பரேட் மேனேஜர் என்ற வார்த்தைக்கே இடமில்லை. எனவே பிஷப் இவான் 19.05.2005 முதல் கார்பரேட் மேனேஜராக செயல்படுவதாக கூறியிருப்பது உண்மைக்கு புறம்பான கூற்றாகும். இவ்வாறு நிர்வாகிகள் உண்மைக்கு புறம்பான விவரங்களை சொல்லி சட்டவிரோதம் செய்து அரசின் நிதியினை சட்டவிரோதமாக பெற்றால் கல்வி இலாகா சம்மந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க விதிகளில் இடம் உண்டா என்ற விவரத்தினையும் விதிகளின் விவரங்களையும் தகவலாக தருக. அந்த அடிப்படையில் மேற்படி பிஷப் இவான் அம்புரோஸ் மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களை தகவலாக தருக்.

தகவல் பெற ரூபாய் 10 மதிப்புள்ள நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

நன்றி.

இப்படிக்கு,

30/1/18

**இணைப்பு:-**

1. Ref.No.2017/252 dated 28.12.2017 கடிதத்தின் நகல்
2. K.Dis.No.6344/A1/2013 dated 27.11.2013 என்ற ஒப்புதல் நகல்
3. தங்களால் மேலொப்பமிடப்பட்ட பாதிரியார் எட்வர்ட் என்பாரின் நியமன ஆணை நகல்.

Scanned by CamScanner